# நமது ஈழநாடு

www.namathueelanadu.com

குரல் 03 மலர் 34 ஜூன் 2023 மின்னஞ்சல்:: contact@namathueelanadu.com இணையம்:: www.namathueelanadu.com


Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app



"எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிலையாக நிற்பதால் மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து கொடாமல் தலைநிமிர்ந்து நிற்கமுடிகின்றது"

*- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்*

# 2300 நாட்களைக் கடந்து...



# இப்போதும் அகதிகளாகிக் கொண்டே இருக்கிறோம்



தீபச்செல்வன்

அகதி வாழ்வெனப்படுவது மரண வதையினாலானது. அது மனிதர்களை மெல்ல மெல்ல அழித்துக் கொண்டிருக்கும் ஒரு வகை யுத்தம். தண்ணீரில் வாழும் மீனை தரையில் எறிந்தால் அது எப்படி துடிதுடிக்குமோ, அப்படித்தான் அகதியின் துடிதுடிப்பும் பூமிப் பந்தெங்கிலும் அகதியாக அலைவுறுகின்ற போதும்கூட தாய்நிலத்தின் பெருங்கனவை கொண்டவர்களாக ஈழத் தமிழினம் இருப்பதன் தவிப்பும் அதனால்தான். ஜூன் 20 சர்வதேச அகதிகள் தினம். கடந்த 2000ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை இயற்றிய தீர்மானத்தின்படி இந்த நாள் பன்னாட்டு அகதிகள் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது. ஆபிரிக்க அகதிகள் நாள் ஜூன் 20 இல் கொண்டாடப்படுவதால் அதே நாளை உலக அகதிகள் நாளாக ஐ.நா பிரகடனப்படுத்தியுள்ளது.

பல்வேறு மோதல்களுக்குள் சிக்கி அகதிகளாக தாம் வசிக்கும் நாட்டினுள், பிற நாடுகளிலென இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களுக்குள்ளாகி வாழ்ந்துவரும் அகதிகள் பற்றிய விழிப்புணர்வினை உலக மக்களிடத்தில் ஏற்படுத்துவதே இந்நாளின் முக்கியமான நோக்கம் என்று ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடுகின்றது. உலகில் அகதிகள் உருவாவதற்கு இனவெறி, அரசியல், மதம், வன்முறை, வறுமை, வேலையில்லா திண்டாட்டம் முதலியவை அடிப்படைக்காரணிகள் ஆகும். அகதிகளின் உரிமைகளை திரும்ப வழங்கவேண்டும். அவர்களும் சமூகத்தில் மற்றவர்களைப் போல நடத்தப்பட வேண்டும் என்பதை இத்தினம் வலியுறுத்துகிறது. ஆனாலும் ஐ.நா உருவாக்கப்பட்டத்திலிருந்தும், அகதிகளுக்கான ஆணையம் உருவாக்கப்பட்டதிலிருந்தும் அகதிகளின் எண்ணிக்கை பெருகியே வருகின்றது. அகதிகளைப் பற்றி கவலைப்படும் நாடுகள், தமது நாட்டுக்குள்ளேயே அகதிகளை உருவாக்குகின்றனர்.

சிரியா, தெற்கு சூடான், சோமாலியா, நைஜீரியா, காங்கோ, மியன்மார் போன்ற நாடுகளில் இருந்து இன்றும் மக்கள் இடம்பெயர்ந்து கொண்டே இருக்கின்றனர். அதைப்போல இலங்கையிலும் போர் முடிந்து பத்தாண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இடம்பெயர்வு முடிவுக்கு வரவில்லை. ஆயுதங்களற்ற யுத்தமும் அரசியல் ரீதியான அழுத்தங்களும் மக்களை இடம்பெயரச் செய்கின்றன. அரச படைகளின் அச்சுறுத்தலால் மக்கள் பலவந்தமாக இடம்பெயருகின்ற நிலை இன்றும் தொடர்வாக பன்னாட்டு அமைப்புக்கள் பகிரங்கமான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளன.

இலங்கையில் இன்னமும் இராணுவத்தால் விடுவிக்கப்படாத பல பகுதிகள் உள்ளன. இன்றும் கேப்பாபுலவு பகுதியை விடுவிக்க கோரும் போராட்டத்தை மக்கள் நடாத்துகின்றனர். அதைப்போல யாழ்ப்பாணம் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தால் அகதிகளாக்கப்பட்ட மக்கள் சொந்த நிலத்திலேயே அகதிகளாக உள்ளனர். அதைப்போல வட்டுவாகல் பகுதியில் சிறுநிலத்தைக்கூட இராணுவம் மக்களிடம் கொடுக்கவில்லை. வடக்கு கிழக்கில் இராணுவம் மக்களின் காணிகளில் நிலை கொண்டிருக்கிறது என்றால் அங்கே மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர் என்றே அர்த்தம் ஆகும்.

கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம், 68.5 மில்லியன் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளதுடன் அவர்களில் 25.4 மில்லியன் பேர் அகதிகளாக உள்ளதுடன் அவர்களில் அரைவாசிப் பங்கினர் 18க்கும் குறைந்த வயதுடையவர்கள் என அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகராலய தகவல்கள் கூறுகின்றன. இதேவேளை, உலகளாவிய ரீதியில் இரண்டு மணித்துளிகளுக்கு ஒருவர் வீதம் இடம்பெயர்வதாகவும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகராயலம் குறிப்பிடுகிறது.

உலக அகதிகளின் எண்ணிக்கையில் இலங்கை அகதிகளும் கணிசமான இடத்தைப் பிடிக்கின்றனர். இன்றும் பல சர்வதேச நாடுகளில் அவர்கள் அகதி முகாங்களில் வாழ்கின்றனர். தமிழ் நாட்டின் பல்வேறு அகதிமுகாங்களிலும் ஈழத் தமிழர்கள் அகதிகளாக வாழ்கின்றனர். தமிழகத்தில் அகதி முகாங்களில் சுமார் ஒரு இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர். முகாங்களுக்கு வெளியில் சுமார் 40 ஆயிரம் பேர் அகதிகளாக பதிவு செய்யப்படாத உள்ளனர். இன்றைய கொரோனா பேரிடர் காலத்தில் இவர்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களை இடைக்கால அகதிகளாகவேனும் தமிழக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கடல் மீன் தரையில் வாழாது. அதைப்போலவே வேரும் இலைகளும் பச்சையங்களும் வாடிப் போனதொரு, உக்கிப் போனதொரு செடியாகவே ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்து உலகம் எங்கும் அலைந்துழல்கின்றனர். சொந்த மண்ணில் வாழ முடியாத நெருக்கடிகளால், ஒளிந்து வாழும் வாழ்வை தாங்க முடியாது மிகவும் அபாயமான வழிகளில் தாய் நிலத்தை விட்டு எமது மக்கள் பெயர்கின்றனர். இன்றைக்கு உலக நாடுகள் பலவற்றிலும் பல இலட்சக்கணக்கான மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர். ஈழ மண்ணிலிருந்து சிதறிப்போன நிலையில் உலகப் பந்து முழுவதும் வீசப்பட்டதொரு வாழ்வே அவர்களுடைய வாழ்வு.

அவுஸ்ரேலிய அகதிமுகாங்களில் பல ஈழத் தமிழர்கள் நாடு கடத்தும் அபாயத்துடன் வாழ்கின்றனர். அவர்களில் பலரும் தாயகத்தில் இருந்து பல்வேறு அச்சுறுத்தல்களினால் நாடு பெயர்ந்ததவர்கள். போர் முடிவுக்கு வந்த பின்னர், முன்னாள் போராளிகள், பொதுமக்களை அச்சுறுத்திய அரசு, அவர்களின் நிலங்களையும் இருந்த சொத்துக்களையும் பறித்துக் கொண்டு அவர்களின் படகுகளில் ஏற்றி புலம்பெயர வைத்தது. மீண்டும் அவர்கள் நாடு திரும்ப முடியாது. அச்சுறுத்தல் ஒரு புறம். இனியவர்கள், நாடு திரும்பி வாழ்வதற்கு எந்தவொரு ஆதாரமும் இங்கே இல்லை. இலங்கை அரசு, நன்கு திட்டமிட்டே வேரோடு பிடுங்கி எறிந்து விட்டது.

இன்றைக்கு ஈழத் தமிழர்கள் இல்லாத நாடு உலகில் இல்லை. ஆனால் ஈழத் தமிழர்களுக்கென்று இருக்கும் நாடு அவர்களின் கையில் இல்லை. பிறந்த மண்ணைவிட்டு இன்னொரு நிலத்தில் வாழும் அகதி வாழ்க்கை மிகவும் கொடியது. ஆனால் சொந்த மண்ணிலேயே அகதிபோல் வாழ்கின்ற வாழ்க்கை எவ்வளவு கொடுமையானது? இப்போது பொருளாதார நெருக்கடியால் கணிசமானவர்கள், ஈழத்தை விட்டு பெயர்கிறார்கள். தமிழ்நாட்டிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்லும் ஈழத் தமிழர்களின் எணிக்கை அதிகரித்துவிட்டது.இப்போதும் நாங்கள்தான் அகதியாகிக் கொண்டிருக்கிறோம். எங்கள் சனவிகிதம்தான் குறைகிறது.

உலகமெங்கும் ஈழத் தமிழ் அகதிகள் இல்லாத நாடுகளே இல்லை என்பதைப் போலவே அகதிகள் ஆகாத ஈழத் தமிழர்களும் இல்லை என்பதும் இந்த நூற்றாண்டின் பெருந்துயரம். ஈழத்தில் போர் நடந்து முப்பது வருடங்கள் என்றால், ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்து அலைவுறத் தொடங்கியும் முப்பது வருடங்கள் கடந்தும் அலைகின்றனர் என்றே அர்த்தமாகும். உலகில் எந்தவொரு இனக் குழுவும் தமது சொந்த மண்ணைவிட்டு, மிக விருப்பத்துடன் புலம்பெயர்வதில்லை. அதுவொரு மரண வலி. புலம்பெயர்ந்த ஒவ்வொரு தமிழர்களின் முகங்களிலும் வார்த்தைகளிலும் அந்த வலியை தெரிந்து கொள்ள முடியும்.

இனப்படுகொலைக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதும் தாய்நிலம் விடுதலையடைய வேண்டும் என்பதும்தான் உலகமெங்கும் அகதிகளாக இருக்கும் ஈழத் தமிழ் மக்களின் ஏக்கமும் கனவும். அகதி என்ற வாழ்வையும் அதற்குரிய ஆயுதமாக அவர்கள் உபயோகித்து வருகின்றனர். இனிவரும் தலைமுறைகளுக்கு இடம்பெயர்வும் புலம்பெயர்வும் வேண்டாம் என்பதே ஈழ அகதிகளின் வலியுறுத்தல். உலகின் எந்தவொரு சனங்களும் அகதியாக அலைந்துழக்கூடாது என்பதே அவர்தம் பிரார்த்தனை. அதற்கு ஈழம் விடையாகவும் தீர்வாகவும் கரங்களில் நெருப்பேந்திய போராட்டமாகவும் இருக்கிறது. அகதியாய் இருத்தல் என்ற துயரம் எவருக்கும் வேண்டாம்.

முகப்புப்படம் : குமணன்




# இலக்கு வைக்கப்படும் முன்னணி

## நீளும் கைதுகளும் விசாரணைகளும்

**தாயகன்**

மருதங்கேணியில், கடந்த 3ஆம் திகதி சொற்ப எண்ணிக்கையான இளைஞர்களுடன் பரந்தவெளி மைதானத்தின் அருகில் உள்ள மரமொன்றின் கீழ் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சந்திப்பொன்றை நடத்தினார்.

இதன்போது அங்கு வருகை தந்த சிவில் உடை தரித்த இரு இளைஞர்கள் சுற்றிச்சுற்றி புகைப்படங்களையும், காணொளிகளையும் எடுக்க முனைந்தபோது, யார் நீங்கள், எதற்கு வந்தீர்கள் என்று கேள்விகளைத் தொடுத்த கஜேந்திரகுமார் மற்றும் அவரது அணியிருடன் முறுகல் நிலைமை ஏற்பட்டது. அப்போது ஒருவர் தப்பிஓடி விடவும் மற்றயைவர் முன்னணியினரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

அகப்பட்டுக்கொண்டவர் தமிழர். ஆனால் அவர் சிறிலங்கா அரச புலனாய்வாளர். அதனைத் தொடர்ந்து அருகிலிருந்த பாடசாலைக்குள் இருந்து சிவில் உடையில் வருகை தந்திருந்த பொலிஸ் உத்தியோகத்தரும் அகப்பட்டவரை மீட்கும் நோக்கில் குரல் எழுப்புகின்றார்.

கஜேந்திரகுமாருடன் முரண்படுகின்றார். அப்போது கஜேந்திரகுமார் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துகின்றார். ஆனால் அருகில் ஆயுதம் தரித்த சீருடையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தருடன் அவர் முரண்படவில்லை. அந்த உத்தியோகத்தரும் வார்த்தைகளை வெளியிடவில்லை.

இதற்குள் அங்கிருந்த ஒருவர் துப்பாக்கியால் கஜேந்திரகுமாரை இலக்குவைத்த நிகழ்வும் அரங்கேறவும், மருதங்கேணி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி அங்கு வரவும் நேரம் சரியாக இருக்கின்றது.

மேற்படி கூற்று மருதங்கேணி சம்பவத்தை முழுமையாக வெளிப்படுத்தும் காணொளியை அடிப்படையாகக் கொண்டது. இந்தக் கூற்றிலிருந்து மிகத்தெளிவாக சில விடயங்களை புரிந்து கொள்ள முடியும்.

அதாவது, தாயகத்தில் ஒரு மக்கள் பிரதிநிதி கூட சுதந்திரமாக நடமாட முடியாத நிலைமை காணப்படுகின்றது. அவர்களைக் கூட விட்டு வைக்காத அளவுக்கு புலனாய்வாளர்களின் பின்தொடருகை நீடிக்கின்றது என்பதாகும்.

இரண்டாவது, சிவில் உடையில் வருகின்றவர்களில் தமிழர்களும் இருக்கின்றார்கள். இளைஞர்களுக்கு உரிய கட்டமைப்பை அமைக்காது விட்டமையால் தமிழினத்திலிருந்தே தமிழர்களை இலக்கு வைக்கும் அளவிற்கு நிலைமைகள் மோசமடைந்து விட்டன என்பதாகும்.

மூன்றாவது, கஜேந்திரகுமார் கோபமடைந்து சில கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தியமை, மற்றும் சிவில் உடையில் வந்தவர்கள் தம்மை அடையாளம் காண முடியாது திணறியமை அதற்காக பொலிஸ் எவ்வளவு மும்முரமாக செயற்பட்டமை என்பதாகும்.

இதுவொருபுறமிருக்கையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முன்னணியின் பெண் அமைப்பாளர் உட்பட மறுதினமே தரதரவென்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டனர்.

அதனையடுத்து மூன்றாவது நபராக பொலிஸார் கை வைத்தது கஜேந்திரகுமாரைத் தான். அவர் நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்புவதற்கு தயாராகி 6ஆம் திகதி கடிதம் மூலம் சபாநாயகர் மஹிந்த யாப்பாவுக்கு அறிவித்திருந்தார்.

மறுதினமான 7 ஆம் திகதி தனது கொழும்பில் உள்ள வீட்டில் சிறப்புரிமைக்கான தயார்ப்படுத்தல்களைச் செய்துகொண்டிருந்த வேளையில் தான் கொள்ளுப்பிட்டி பொலிஸார் அவரது வீட்டுக்குச் சென்று கைது செய்து கொண்டு முதலில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் பெறுவதற்காக செல்வதாகக் கூறிவிட்டு பின்னர் கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலத்தினை வழங்கிவிட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது கஜேந்திரகுமார் 5 இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து முன்னணியின் மேலும் இரு செயற்பாட்டாளர்கள் விசாரணைக்காக அழைக்கப்பட்டதோடு, கஜேந்திரகுமாரிடத்திலும் கடந்த 15ஆம் திகதி மருதங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு மேலதிக வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

இந்த நிலைமைகள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சிறிலங்கா பொலிஸ் மற்றும் புலனாய்வுத் தரப்பு இலக்கு வைத்துச் செயற்படுகின்றது என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது. இந்த நிலைமைகள் எதிர்வரும் காலத்தில் இன்னமும் தீவிரமடையலாம்.

அண்மைக்காலமாக, ஆயிரம் விமர்சனங்கள் காணப்பட்டாலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமது நிலைப்பாட்டிலிருந்து படியிறங்கவில்லை. அதுமட்டுமன்றி, நாவற்குழியில் ஜெனரல் சவேந்திர சில்வாவின் முடிவைப்பு விழா வருகையின்போது காண்பித்த எதிர்ப்பு, தையிட்டி விகாரை விடயத்தில் காண்பித்த தொடர் எதிர்ப்பு என்பன சிறிலங்கா பாதுகாப்பு தரப்பிற்கு குடைச்சலை கொடுப்பதாக இருக்கின்றது.

இதன் காரணத்தினால், முன்னணியின் செயற்பாட்டு அரசியலை முடக்க வேண்டிய தேவை சிறிலங்கா அரசாங்கத்திற்கு உள்ளது. இதன் காரணமாக, முன்னணியின் தொண்டர்களை தட்டி வைப்பதிலும் பார்க்கையில், நேரடியாக அதன் தலைமையில் கை வைத்தால் அனைத்தும் அடங்கிவிடும் என்று கணக்குப் போடப்பட்டுள்ளது.

இதேநேரம், முன்னணியை வடக்கில் பிரபல்யப்படுத்தி வளர்த்து விடுவதன் மூலம் தென்னிலங்கையில் தீவிர அரசியலை முன்னகர்த்தலாம் என்ற ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரமொன்று உள்ளதாகவும் தர்க்கங்கள் உள்ளன.

அந்த தர்க்கம் யதார்த்தமாக இருக்க வேண்டுமானால், முன்னணியின் தீவிர செயற்பாடுகளுக்கு இடமளிப்பதன் ஊடாகவே நன்மைகளை அடைய முடியும். முன்னணியின் செயற்பாட்டு அரசியலை முடக்குவதால் நட்டம் தான் எஞ்சும்.

இதேவேளை, கஜேந்திரகுமார் ஒரு மக்கள் பிரதிநிதி. அவர் அரசியல் கட்சியின் தலைவர். இதனால் அவரது கைது விவகாரம் பலத்தவாதப்பிரதிவாதங்களை உள்நாட்டிலும், சர்வதேசதிலும் ஏற்படுத்தியிருக்கிறது.

முதலில் அவர் கைது செய்யப்பட்டதன் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினருக்கு காணப்படுகின்ற சிறப்புரிமைகள் மீறப்பட்டிருக்கின்றது. அதாவது, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்பதற்கு இடமளிக்க வேண்டும். அவர் நாடாளுமன்றத்திற்கு செல்வதற்கு தயாராகிக்கொண்டு இருக்கும் போது கைது செய்ய முடியாது.

அத்துடன், கஜேந்திரகுமாரை கைது செய்வதற்கு முன்னதாக பொலிஸார் சபாநாயகருக்கு அறித்திருக்க வேண்டும். ஆனால், பொலிஸார் வாக்குமூலம் பெறுவதாகவே பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளனர்.

கஜேந்திரகுமாரை கைது செய்யும்போது பிடியாணை கொண்டு சென்றிருக்கவில்லை. அவரைக் கைது செய்தமைக்கான எந்தச் சான்றுப்பொருட்களும் குடும்பத்தாருக்கு வழங்கப்படவில்லை.

அதேநேரம், கஜேந்திரகுமார் கைது செய்யப்படுவதற்கு சொற்ப நேரம் முன்னதாக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது, பிடியாணை இல்லாது விட்டால் பொலிஸாருடன் செல்ல வேண்டியதில்லை என்றே கூறியிருக்கின்றார்.

ஆனால், பின்னர் பொலிஸார் கஜேந்திரகுமாரை அழைத்துச் செல்கின்றபோது சபாநாயகர் அமைதியாகிவிட்டு, நாடாளுமன்றக் கூட்டத்தில் பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்க விரும்பவில்லை என்று நழுவிட்டார்.

இருப்பினும், கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் அவர் மீது சரமாரியாக கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டதுடன் நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறிவிட்டீர்கள் என்ற விமர்சனத்துக்கும் உள்ளாகினார். அதுமட்டுமன்றி, முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஏற்கனவே வழங்கிய முன்னுதாரணத்தினையும் பின்பற்றவில்லை என்ற விசனத்திற்கும் உள்ளாகினார்.

எவ்வாறாயினும், இக்கைதுக்கான எதிர்வினை நாடாளுமன்றத்திலும் வெளியிலும் கடுமையாகவே இருந்திருக்கின்றது. கட்சி பேதமின்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமாரின் கைதினை கண்டித்தனர் கஜேந்திரகுமார் தற்போது வரையில் விசேட பிரமுகர்களுக்கான பாதுகாப்பினைக் கூட பெறாதுள்ள நபர் என்ற விடயத்தினையும் முழு உலகிற்கும் அறியச் செய்தனர்.

அதேநேரம், இக்கைதினை எதிர்த்து கனடாவிலுள்ள இலங்கை உயரஸ்தானிகரகத்தின் முன்னால் புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தை நடாத்தியுள்ளனர். பிரித்தானியா, சுவிஸ்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்ரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் ஆர்ப்பாட்டத்திற்கான முயற்சிகள் இடம்பெற்றிருந்தன. தமிழ் நாட்டிலும் முயற்சிகள் நடந்தன. அவர் உடன் விடுதலை செய்யப்பட்டதால் தற்காலிகமாக போராட்டங்கள் நிறுத்தப்பட்டன.

அதேநேரம், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் முன்னணியின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் வாயில் கறுப்புத்துணியைக்கட்டி மௌனப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

உண்மையில் கஜேந்திரகுமாரின் கைதானது பிறிதொரு விடயத்தினையும் அம்பலப்படுத்துகின்றது. தமிழ்த் தேசிய இனத்திற்கு சுய மரியாதை இருக்கின்றது. அந்தச் சுய மரியாதை கஜேந்திரகுமார் போன்ற கொள்கை பற்றுதி மிக்க மக்கள் பிரதிநிதிகளினாலேயே வெளிப்படுத்தப் படுகின்றது.

அவ்வாறான நிலையில் தமிழர்களின் சுயமரியாதை கஜேந்திரகுமாரின் கைதின் மூலமாக சிதைக்கப்பட்டிருக்கின்றது. ஜனநாயக உரித்து பறிக்கப்பட்டிருக்கின்றது. மக்கள் பிரதிநிதிக்கே இந்த நிலைமை என்றால் சதாரண மக்களின் நிலைமை என்னவென்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 03 மலர் 36 ஜூன் 2023 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com

# ஜெனிவா: திக்கற்று நிற்கும் பாதிக்கப்பட்ட உறவுகள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடர் கடந்த 19ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் ஜ/லை மாதம் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் குறித்த அமர்வில் 21ஆம் திகதி கடந்த புதன்கிழமை ஜெனிவா நேரப்படி பி.ப 3 மணிக்கு (சிறிலங்கா நேரப்படி மாலை 6.30 மணிக்கு) சிறிலங்காவின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் டேர்க்கின் வாய்மொழிமூல அறிக்கையை வாசித்துள்ளார்.

'சிறிலங்காவில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்று ஏலவே நிறைவேற்றப்பட்டுள்ள 51/1 தீர்மானத்தின் பிரகாரம் அதன் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரத்தில் அடையப்பெற்றுள்ள முன்னேற்றங்கள், பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழல் மோசடிகள் என்பன தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து உறுப்பு நாடுகள் தமது கரிசனைகளை வெளிப்படுத்தி உள்ள போதும் சிறிலங்கா குறித்து புதிய தீர்மானங்கள் எவையும் நிறைவேற்றப்படப்போவதில்லை என்பது நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டதாகும்.

அதேபோன்று கடந்த கூட்டத்தொடரில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று சிறிலங்கா சார்பில் பங்கேற்றிருந்த நிலையில், இம்முறை அமர்வில் ஜெனிவாவில் உள்ள சிறிலங்காவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக தலைமையிலான குழு பங்கேற்றுள்ளது.

இதிலிருந்து சிறிலங்கா இந்த விடயத்தினை பொருட்டாக கொண்டதாக இல்லை என்பது வெளிப்படுகின்றது. அத்துடன் ரணில் தலைமையிலான தற்போதைய அரசுக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குல நாடுகள் எவ்விதமான காட்டமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்காது என்பதும் வெளிப்படையானது.

பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் வழமைபோன்றே சில அரசியல் தலைவர்களும், பாதிக்கப்பட்ட தரப்பினரும், புலம்பெயர் அமைப்புக்களும் பங்கேற்று பக்க நிகழ்வுகளை அலங்கரிக்க முடியும்.

இதனைவிடவும், வேறெந்த அதியங்களும் நிகழ்ந்துவிடப்போவதில்லை. இது இம்முறை மட்டுமல்ல எதிர்காலத்திலும் இந்த நிலைமைகள் நீடிப்பதற்கான வாய்ப்புக்களே உள்ளன.

ஏனென்றால், ரணில் தலைமையிலான அரசாங்கமே மீண்டும் ஆட்சிப்பீடத்தில் அமரப்போகின்றது என்பது ஏறக்குறைய உறுதியாகி யுள்ளது. அவ்வாறு மாற்றங்கள் நிகழ்ந்தாலும் ஆட்சியில் அமரப்போகின்ற அரசாங்கம் நிச்சயமாக அமெரிக்க, இந்திய, மேற்குலகத்தை மையப் படுத்தியதாகவே இருக்கப்போகின்றது. இது பூகோள அரசியலில் ஆதிக்கம் எனலாம்.

அவ்வாறான நிலையில், பாதிக்கப்பட்டு தமக்கான நீதிகோரி நிற்கும் தரப்பினருக்கு ஜெனிவா கூட்டத்தொடர்கள் வெறுமனே ஒரு கண்துடைப்பாகவே அமைக்கப்போகின்றது.

இந்த நிலைமை, நீடித்தால் விடயங்கள் நீர்த்துப்போதல் என்பதற்கு அப்பால் ஒட்டுமொத்தமாக தடந்தெரியாத நிலைமையே விரைவில் ஏற்பட்டுவிடும்.

# 'பிரித்தானியாவில் தமிழீழ தேசியக்கொடிக்கு தடையில்லை'

## மீண்டும் உறுதிசெய்த பிரித்தானியா

பிரித்தானியாவில் தமிழீழ தேசியக கொடிக்கு எவ்வித தடைகளும் இல்லை. அதனை எவ்வித தயக்கமுமின்றி பயன்படுத்தலாம் என என பிரித்தானிய உயர்மட்ட காவல்துறை உறுதி பூர்வமாக தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் 19 ஆம் திகதி பிரித்தானியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது அவருக்கு எதிராக பிரித்தானியாவின் IHG Continental Park Lane Hotel முன்பாக புலம்பெயர் தமிழர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்பாட்டத்தின் போதே இவ்வாறு அதிகாரியினால் கூறப்பட்டது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கள் பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு முதலில் கடந்த 19 ஆம் திகதி (யூன்) பிரித்தானியாவிற்கு வருகைதந்திருந்தார். அதனைத்தொடர்ந்து எதிர்வரும் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் பிரான்சில் நடைபெ ற்ற புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாட்டில் கொண்டார்.

இந்நிலையில் பிரித்தானியாவிற்கு முதலில் விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரித்தானியா வாழ் புலம்பெயர் தமிழர்களால் (19) இரு வேறு இடங்களில் மாபெரும் எதிர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

இதில் அவர் தங்கியிருந்த விடுதிக்கு முன்னர் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழர்கள் ஒன்று திரண்டு தமிழீழ தேசிய கொடிகளை கைகளில் ஏற்தியவாறு தமிழினப்படுகொலை யாளி ரணிலே வெளியேறு என்ற கோசங்களை எழுப்பினர்.

இதன்போது அங்கிருந்த விசமிகளினால் தடைசெய்யப்பட்ட கொடிகளை ஏந்திப் போராடுகிறார்கள் என அங்கு நின்ற பிரித்தானிய பொலிஸ் அதிகாரிகளுக்கு பொய்யான தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து தமிழீழ தேசிய கொடிகளை ஏந்தி போராட பொலிஸாரினால் முதலில் தடைகள் ஏற்படுத்தப்பட்டது. எனினும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டபோது பின்னர் மேல் அதிகாரிகள் ஆர்ப்பாட்டக்களத்திற்கு வருகை தந்து குறித்த விடயம் தொடர்பில் ஆராய்து, தமிழீழ தேசிய கொடிக்கு பிரித்தானியாவில் தடையில்லை. நீங்கள் அவற்றை பயன்படுத்தலாம். தங்களிற்கு முதலில் தவறான தகவல்களே வழங்கப்பட்டது என்றும் கூறினார்கள்.

இதன்மூம் பிரித்தானியாவில் தமிழீழ தேசியக்கொடிக்கு தடையில்லை என்பதை மீண்டு மொருமுறை பிரித்தானியா உறுதிசெய்துள்ளது. கடந்த 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தமிழீழ தேசியக்கொடிக்கு பிரித்தானியாவில் தடை இல்லை என்பது தொடர்பில் பிரித்தானியாவின் முன்னாள் உள்துறை செயலாளர் தனது கடிதம் மூலம் தெளிவுபடுத்தியதை பிரித்தானியாவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மீண்டும் உறுதிப்படுத்தி யுள்ளார்.


## மறைந்த காட்டூனிஸ்ட் அஸ்வினின்

## தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து...



# சிறிலங்காவிலுள்ள மனிதப் புதைகுழிகளும் வெற்றியடையாத அகழ்வுப் பணிகளும்

## பாரிய மனித புதைகுழிகள் குறித்து வெளியாகியுள்ள கூட்டறிக்கை




கடந்தகால பிரச்சினைகளை தீர்த்துவைப்பதில் சிறிலங்கா அரசு சிரத்தையாக இருக்குமாயின் சிறிலங்காவிலுள்ள பாரிய மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் அனைத்திலும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் இருப்பதை உறுதிசெய்ய வேண்டுமென சிறிலங்காவிலுள்ள காணாமல் போன குடும்பங்களுடன் இணைந்து பணியாற்றும் 5 குடியியல் சமூகக் குழுக்கள் கூட்டாக தெரிவித்துள்ளன.

சிறிலங்காவிலுள்ள பாரிய மனிதப் புதைகுழிகளும் வெற்றியடையாத அகழ்வுப் பணிகளும்; எனும் தலைப்பில் தென்னாபிரிக்காவை தளமாகக் கொண்ட இயங்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்திற்கான அமையம் (ITJP), இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடக அமையம் (JDS) மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி மையம் (CHRD) மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் அமைப்பு (FOD) ஆகிய மனித உரிமைகள் அமைப்புக்கள் இணைந்து இலங்கையில் மூடிமறைக்கப்படும் பாரிய மனித புதைகுழிகள் பற்றிய ஆய்வு அறிக்கை ஒன்றை இன்று வெளியிட்டுள்ளன.

இதில் இலங்கைத்தீவ முழுவதிலும் உள்ள பாரிய மனித புதைகுழிகளை தோண்டி ஆய்வு செய்வதில் இலங்கை தொடர் தோல்விகளை சந்தித்து வருவதுடன் கடந்த மூன்று தசாப்தங்களாக வெறும் 20மனித புதைகுழிகளே தோண்டப்பட்டுள்ளன. அதேவேளை இதுவரையில் எந்த குடும்பத்திற்கும் தங்களது அன்புக்குரியவர்களது மனித எச்சங்கள் கிடைக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. சிறிலங்காவில் அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக் குழுக்களில் ஒன்றுகூட பாரிய மனிதப் புதைகுழிகளை விசாரணை செய்வதற்கான ஆணையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நீதிபதிகளும், தடயவியல் நிபுணர்களும் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர், நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதை காவல்துறை தாமதப்படுத்தியுள்ளது, குடும்பங்களின் சட்டவாளர்கள் புதைகுழிகள் உள்ள இடங்களுக்குப் போவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது, தற்போதும் உயிருடன் உள்ள சாட்சிகளைக் கண்டறிவதற்கு எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதையும் விளக்கி நிற்கின்றது.

இந்நிலையிலலேய இக் கூட்டறிக்கையை வெளியிட்ட மேற்படி மனித உரிமைகள் அமைப்புக்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு முக்கிய பரிந்துரைகளையும் விடுத்துள்ளன. அதில அதில் பாரிய மனித புதைகுழி அகழ்வுகளை மேற்கொள் சட்டத்தினையும் கொள்கையினையும் இயற்றுதல், முன்மொழியப்பட்டுள்ள சட்டக் கட்டமைப்பு, கொள்கை, மற்றும் பாரிய மனிதப் புதைகுழிகள் மீதான நியம செயற்பாட்டு நடைமுறைகள் என்பன தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இதர சர்வதேச வல்லுனர்கள் உட்பட வெளிப்படையான ஆலோசனை செயற்பாடு ஒன்றினை மேற்கொள்ளுதல், புதைகுழிகள் உள்ளிட்ட நாட்டிலுள்ள தடயவியல் ஆய்வுத்திறனை மேம்படுத்தல். தேவையான நிபுணத்துவம் கிடைக்கும் வரை அகழ்வுப் பணிகளை இடை நிறுத்துவதற்காக காணாமற்போனவர்கள் மீதான அகில இலங்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் சட்டமா அதிபர் அலுவகத்தை மீள்கட்டமைப்புச் செய்தல், சுயாதீன வழக்குத்தொடரும் சேவையொன்றினை உருவாக்கி, அகழ்வுப் பணிகளின் முடிவுகள் தொடர்பான வழக்குகள் விசாரணைகள் சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் இடம்பெறுகின்றன என்பதை உறுதிப்படுத்தல். ஆகிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

இதனிடையே வெளியாகியுள்ள மனித புதைகுழிகள் தொடர்பான கூட்டறிக்கை குறித்து கருத்து தெரிவித்த ஐவுதீயின் நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா, 30 ஆண்டுகள் கடந்த நிலையிலும் உண்மையை கண்டறிவதற்காகவும் நீதியை பெறுவதற்காகவும் நாங்கள் போராடிக்கொண்டிருக்க வேண்டிய நிலையிலேயே இருக்கின்றது. பெரும் அட்டூழியங்களில் ஈடுபட்ட கோத்தபாய ராஜபக்ஷ உட்பட்டவர்கள் உடனடியாகவே பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தால் உள்நாட்டுப் போரில் நடந்த பாரிய அட்டூழியங்களும் தண்டனை விலக்களிப்புக்களும் தவிர்க்கப்பட்டிருக்கும். பொறுப்புக்கூறல் என்பது ஒரு விருப்பத் தெரிவான நடைமுறையல்ல. மாறாக சிறிலங்காவின் அனைத்து மக்களதும் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு இது அவசியமானதாகும் என்று தெரிவீத்தார்.




இதேவேளை வெளியாகியுள்ள மேற்படி மனித புதைகுழிகள் பற்றிய விசேட அறிக்கையை தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நேரில் சென்று கையளித்தனர்.

இந்த ஆய்வு அறிக்கையை பெற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புலம்பெயர் உறவினர்களின் வேதனைகளை அக்கறையுடன் கேட்டதுடன் மேலும் இவ்விடயம் தொடர்பாக தாங்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்புவதாகவும் வாக்களித்தனர்.

நமது ஈழநாடு
www.namatheelanadu.com
ஜூன் 2023

# புதிய கூட்டமைப்பின் எதிர்காலம்

**தந்திரீகன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தனித்துச் செயற்படப்போவதாக அதன் தாய்க்கட்சியான இலங்கை தமிழ் அரசுக்கட்சி உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை மையப்படுத்தி அறித்திருந்தது.

இந்தக்கையோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனி நாங்கள் தான். அதன் ஸ்தாபிப்பில் இருந்துள்ளோம். ஏனைய கட்சிகளையும் இணைத்துக்கொண்டு நாம் வலுவான கூட்டமைப்பாக பயணிப்போம் என்று அறிவித்தது ரெலோ.

இதில் நியாயங்கள் உள்ளன. இலங்கை தமிழரசுக் கட்சிக்கு அடுத்தபடியாக வடக்கு, கிழக்கில் அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாக ரெலோ உள்ளது. அதனிடத்தில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளது.

இந்த நிலையில், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஜனநாயக போராளிகள், தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய வற்றை இணைத்துக்கொண்டு 'ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி' என்ற உத்தியோக பூர்வக் கூட்டை அறிவித்தது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்பது பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாகும். இது, புளொட்டிடம் உள்ளது. இந்தக் கட்சியின் செயலாளர் ஆர்.ராகவன். அவர் புளொட்டின் மத்திய குழு உறுப்பினரும் முக்கிஸ்தரும் ஆவார்.




எனினும், இந்தப் புதிய கூட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று தான் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி அடையாளப்படுத்தி வந்தது. அதிலும், ரெலோவின் ஊடகப்பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் தான் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு, 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' வர்ணம் பூசுவதில் மிகத் தீவிரமாக இருந்தார்.

குறிப்பாக, 'ஜனநாயக' என்பதை சுருக்கியும் 'கூட்டணி' என்பதற்கு பதிலாக 'கூட்டமைப்பு' என்ற பதத்தினையும் பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தம்மை அடையாளப்படுத்துவதற்கு பகிரங்கப்பிரயத்தனம் செய்யப்பட்டது.

இவ்வாறான நிலையில், தமிழரசுக்கட்சியால் நொந்துபோன அணிகளின் கூட்டாக இருந்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக இருந்தமையால், அதனையொரு கட்டமைப்பு சார் அமைப்பாக உருவாக்க வேண்டும் என்பதில் மிகத் தீவிர மாக இருந்தன.

குறிப்பாக, தலைவர், செயலாளர், பொருளார் தேசிய அமைப்பாளர், தலைமைத்துவக் குழு, உள்ளிட்ட முக்கிய பதவிகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தன.

அத்துடன், உருப்படியான, பங்காளிகளை மதிக்கின்ற கூட்டணி யாப்பு ஒன்றும் உருவாக்கி அதனை மையப்படுத்திச் செயற்படுவதென்பதிலும் இந்த தரப்பினர் அதிகளவில் ஈடுபாடு காண்பித்தனர்.

இந்தப் பின்னணியில் தான் கடந்த 18ஆம் திகதி வவுனியா வில் உள்ள தனியார் விடுதியொன்றில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தீர்க்கமான கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஏற்கனவே சிறுசிறு திருத்தங்கள் செய்யப்பட்ட நிலையில் நிகழ்நிலையின் ஊடாக உரை யாப்பட்ட யாப்பு சீர்திருத்தங்களுடன் இறுதி செய்யப் பட்டது.

இதனையடுத்து, பதவி நிலைகள் பகிரப்பட்டன. செயலாளராக ஆர்.ரகவனே தொடர்வதெனவும், பொருளா ளராக ஜனயநாயக போராளிகளின் துளசியும், தேசிய அமைப்பாளராக ரெலோவின் செயலாளர் நாயகம் ஜனாவும், ஊடகப்பேச்சாளராக ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆனால் இந்தக் 'கூட்டுக்கு' ஒரு தலைமை தெரிவு செய்யப்படவில்லை. தற்போதைக்கு 'கூட்டுத்தலைமையுடன்' செல்வோம் என்றே தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தமிழ்த் தேசியக் கட்சி ஒட்டுமொத்தமாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. அதன் எந்தவொரு உறுப்பினருக்கும் முக்கிய பதவி வழங்கப்படவில்லை.

உண்மையில், கூட்டுத்தலைமையுடன் ஒரு கூட்டுச் செல்வதற்கான தீர்மானத்தினை இதயசுத்தியுடன் எடுத்திருந்தால் அதுவொரு முக்கியமான விடயமாகும்.

ஆனால், இந்தக் கூட்டணிக்குள், 'கூட்டுத்தலைமை தீர்மானம்' எடுக்கப்பட்டிருப்பது தலைவர்களுக்கு இடையில் காணப்படுகின்ற நம்பிக்கையீனமும், தாழ்வு மனப்பான்மையும் தான்.

உண்மையில் இந்தக் கூட்டணியின் தலைமைத்து வத்தினை ஏற்பதற்கு ரெலோ கடுமையாக உழைத்தது. அதில் நியாயம் இருப்பதாகவே புளொட்டும், ஈ.பி.ஆர்.எல்.எப்பும் கருதின.

எனினும், ரெலோ தலைமைத்துவத்தில் அமர்ந்து விட்டால் பின்னர் நிலைமைகள் மோசமாகிவிடுமோ என்ற எண்ணம் அத்தரப்புக்கு ஏற்படவும் சூழற்சி தலைமை என்றும் அதன் முதலாவது அங்கத்துவத்தினை ரெலோ கொண்டிருக்கலாம் என்று முன்மொழிந்தன.

ஆனால், ரெலோ தலைமைத்துவத்தினை பெறுவதை தமிழ்த் தேசியக் கட்சி விரும்பவில்லை. குறிப்பாக என்.ஸ்ரீகாந்தா விரும்பவில்லை. ஏனென்றால் ஸ்ரீகாந்தா ரெலோவில் இருந்தவர். அப்போதே செல்வம் அடைக்கலநாதன் தலைமைப்பதவியில் இருந்தமை ஸ்ரீகாந்தாவுக்கு குடைச்சலைக் கொடுத்துக்கொண்டு தான் இருந்தது.

அவ்வாறான பின்னணியில் அதிலிருந்து வெளியே வந்ததன் பின்னர் மீண்டும் செல்வம் அடைக்கலநாதனின் தலைமைத்துவத்திற்குள் செயற்படுவதென்பதில் அவருக்கு 'ஒவ்வாமை' இருப்பதில் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

இதனையடுத்து ரெலோவின் அண்மைக்காலச் செயற் பாடுகள் அக்கட்சியிடத்தில் தலைமைத்துவத்தினை வழங்குவது தொடர்பில் புளொட்,ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியவற்றுக்கு உள்ளூர விரும்பாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, வவுனியா நெடுங்கேணியில் தாய்வான் நிறுவனமொன்றின் ஊடாக (குறித்த தாய்லாந்து நிறுவ-னம் சீனாவின் பினாமி என்பதும், அந்த நிறுவனத்துடன் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதின் கரம் இருப்பதும் வேறுகதை) சீனத்தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கு ரெலோ எடுத்துவருகின்ற முயற்சியாலேயே அந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஏனென்றால், குறித்த தாய்லாந்து நிறுவனம் சம்பந்தமாகவும், அதனுடைய பின்னணி சம்பந்தமாகவும், அயல்நாடான இந்தியா கரிசனை கொண்டிருக்கின்றது. அத்துடன் குறித்த காணியை அந்த நிறுவனத்திற்கு வழங்காதிருப்பதற்குரிய நகர்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, அந்த இடத்தில் இந்தியா தனக்குச் சொந்தமான சீனிக் கம்பனியை ஸ்தாபிப்பதற்கும் விருப்பம் காண்பிக்கின்றது.

ஆக, ரெலோ தலைமைத்தவத்திற்கு வருகின்றபோது, அதன் பங்களிப்பில் தாய்லாந்து நிறுவனம் தயாகத்திற்குள் நுழைந்தால் அதனை இந்தியா வெறுத்தால் கூட்டணி அல்லோலகல்லோலப்பட்டு விடும் என்பது புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகியவற்றின் கரிசனையாகவுள்ளது. அதனால் தான் ரெலோவுக்கு தலைமைத்துவம் செல்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் இருந்தபோது 2015ஆண் ஆண்டு தேர்தலில் கூட்டமைப்புடன் இணைந்து செல்வதற்கு ஜனநாயக போராளிகள் முனைந்தார்கள். அப்போது வவுனியாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது ஜனநாயக் போராளிகள் 'புலனாய்வுப் பிரிவினருடன் இருப்பவர்கள்' என்று சம்பந்தன் பகிரங்கமாகவே தெரிவித்தார்.

இதன்பின்னர் ஜனநாயகப் போராளிகள் வித்தியாதரன் போன்றவர்களின் பின்னணியில் இயங்கியிருந்தாலும், அவர்கள் மீதான சந்தேகம் வடக்கு,கிழக்கு பூராகவும் உள்ளது.

அவ்விதமான பின்னணியில் அந்த அணியையும் ரெலோ தான் புதிய கூட்டணிக்குள் அழைத்து வந்திருந்தது. ரெலோ, ஜனநாயக போராளிகளை ஆங்குராட்பன கூட்டத்திற்கு அழைத்துவந்தமை குறித்து ஏனைய கட்சிகளுக்கு முன்னறிவித்தல் செய்யப்படவில்லை.

ஆகவே, அது தொடர்பிலும், ஏனைய கட்சிகளுக்கு சந்தேகமான மனோநிலையொன்று ரெலோ மீது காணப்படுகின்றது. ஏனென்றால் ஜனநாயகப் போரா-ளிகள் இன்னமும் என்ன செய்கின்றார்கள் என்பது பரம ரகசியம்.

அதுமட்டுமன்றி, பின்னரான காலத்தில் புளொட் தலைவர் சித்தார்த்தனிடத்தில் தலைமைத்துவத்தினை ஏற்றுக்கொள்வதற்குரிய கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

சித்தார்த்தன் தலைமைத்துவத்தினை ஏற்றுக்கொண்டால் தமிழரசுக்கட்சியின் வாக்குகளையும் கணிசமாக உடைத்து விட முடியும் என்றொரு கணக்கும், அவருக்கும் சர்வதேச இராஜதந்திரிகளை கையாள முடியும் என்றொரு தர்க்கமும் முன்வைக்கப்பட்டது.

ஆனால், சித்தார்த்தனைப் பொறுத்தவரையில் அவருக்கு தலைமைத்துவத்தினை ஏற்றுக்கொள்வதில் அவ்வளவான ஈடுபாடு காணப்படவில்லை.

அதுமட்டுமன்றி, அவர் தலைமைத்துவத்தினை ஏற்றுக் கொண்டால், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளர் பதவியை விட்டுக்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

ஆனால் அந்தக்கட்யில் செயலாளருக்கே எழுத்துவழியில் அதிகாரம் காணப்படுகின்றது. ஆகவே புளொட் கூட்டணியில் 'பிடி'யை விட்டுக்கொடுப்பதற்கு தயாராக இல்லை.

ஆக, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள், ஜனநாயகம் இருக்கலாம். தேசியம் இருக்கலாம் கூட்டும் இருக்கலாம். ஆனால் இவை அனைத்திற்கும் அடிப்படையாகவுள்ள நம்பிக்கை இல்லை.

இந்த கட்டமைப்புக்கள் அனைத்தும் ஆயுத வழியில் தம்மை வரித்துக்கொண்டவை. பின்னர் ஜனநாயக வழிக்கு திரும்பியவை. என்றாலும் எண்பதுகளில் இந்த தரப்பினர் வார்த்தைகளால் பேசியதை விடவும், ஆயுதங்களால் அதிகம் பேசியதே வரலாறாக உள்ளது.

அப்படியிருக்கையில், 'சுட்ட மண் ஒட்டும்' என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் வேறுவழியின்றி 'ஒட்டிக் கொள்ளத்தான்' வேண்டியுள்ளது. அவ்வாறு இல்லாது விட்டால் அடுத்துவரும் தேர்தல்களில் அடையாளம் காணாது போவதற்கே வழியேற்படும் அபாயமுள்ளது.

# கனடாவின் நீதி முன்மாதிரியில் உலகம் பாடம் கற்க வேண்டும்

## தமிழ் தேசிய ஆய்வு அமையம்






உலகின் தலை சிறந்த நாடு என்ற அடையாளத்தை கனடா தனதாக்கிக் கொண்டுள்ளது. இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உண்மையும் நீதியும் வெளிப்பட கனடா காட்டியுள்ள சிரக்தை உலகின் உன்னத தேசங்களில் ஒன்றாக கனடாவை தலை நிமிரச் செய்துள்ளது. ஈழத் தமிழ் மக்களின் நீதிக்கான விடயத்தில் தன்நலன் சார்ந்து சிந்திக்கும் உலக நாடுகள் கனடாவின் நீதி முன் மாதிரியில் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கிறது தமிழ் தேசிய ஆய்வு அமையம்.

### ஈழத்தின் இனப்படுகொலை துயரம்

இலங்கைத் தீவில் முள்ளிவாய்க்கால் என்ற நிலப் பகுதியில் 2009ஆம் ஆண்டு உலகின் மாபெரும் இனப்படுகொலைத் துயரம் நிகழ்த்தப்பட்டது. போர் தவிர்ப்பு பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் தஞ்சமடைந்த மக்கள், கொன்று அழிக்கப்பட்டார்கள். குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று பேதம் பாராமல் ஸ்ரீலங்கா அரசு மாபெரும் இனப்படுகொலையை முள்ளிவாய்க்காலில் அரங்கேற்றியது. இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய இனப்படுகொலைத் துயரமாக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை அரங்கேற்றப்பட்டது.

தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகளும், தடைசெய்யப்பட்ட நஞ்சுக் குண்டுகளும் அப்பாவி மக்கள் மீது வீசப்படடன. கருவில் இருந்த குழந்தைகளும் கொன்று அழிக்கப்பட்டார்கள். பெண்கள்மீது பாலியல் வன்புணர்வுகள் இடம்பெற்று பெரும் இனக்கொலைகள் நடந்தன. சரணடைந்த மக்கள்மீதும் போராளிகள் மீதும் பாரிய வன்முறைகள் நிகழ்த்தப்பட்டு படுகொலைகள் நடந்தன. வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த போராளிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். சரணடைந்த போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர். பெண் போராளிகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

### நீதியின் ஏக்கம்

மேற்குறித்த விடயங்கள் யாவும் இனப்படுகொலை என்பதற்கான வரைவிலக்கணத்திற்கு முற்று முழுதாக பொருந்துகின்ற கொடுமைகள் ஆகும். 2009இற்குப் பிந்தைய ஈழப் போராட்டம் என்பது இனப்படுகொலைக்கான நீதியைக் கோரியதாகவே அமைகின்றது. போரில் பல்வேறு இழப்புக்களை சந்தித்து, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி, ஈழத் தமிழ் மக்கள் கடந்த 14 வருடங்களாகப் போராடி வருகிறார்கள். இப்படி போராடுகின்ற மக்களுக்கு இனப்படுகொலைக்கான நீதித்தான் தீர்வாகவும் அவர்களின் ஏக்கமாகவும் இருக்கின்றது.

இந்த நிலையில் கடந்த மே மாதம் 18 அன்று முள்ளிவாய்க்காலில்ஒன்றுசேர்ந்த மக்கள், இனப்படுகொலைக்கான நீதியை இந்த உலகம் முன்வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் கலந்துகொண்ட மக்கள் கண்ணீரோடும் கதறலோடும் நீதிக்காக எழுப்பிய குரல்கள் உலகின் முகங்களை தட்டின. போரில் கொல்லப்பட்டவர்களுக்காகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகவும் நீதிக்காக தவித்த மக்களின் கண்ணீரால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிலம் நனைந்ததும் உலக மக்களின் நெஞ்சைக் கரைத்தது.

### நடந்தது இனப்படுகொலை

ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்பதை உலகம் ஏற்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பை ஈழ மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் தமிழ்நாட்டில் முன்னால் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்றும் அதற்கு பன்னாட்டு விசாரணை வேண்டும் என்றும் ஈழ இனப்படுகொலையை நடாத்திய ஸ்ரீலங்கா அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் அதிரடித் தீர்மானங்களை நிறைவேற்றியமை வரலாற்றுச் சிறப்பானதாகும்.

இதேவேளை வடக்கு மாகாண சபையிலும் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்ற தீர்மானம், முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் திரு க.வி. விக்கினேஸ்வரன் தலைமையில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தின் பிரதி ஐ.நா அவைக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. உலகம் ஈழத்தில் நடந்த இனப்படுகொலையை ஏற்க வேண்டும் என்றும், ஈழத்தில் வரலாறு முழுவதும் இனப்படுகொலை தொடர்கிறது என்பதையும் வட மாகாண சபை தீர்மானம் வலியுறுத்தியது.

### கனடா ஆதரவுத் தீர்மானம்

இந்த நிலையில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் மே 18ஐ முன்னிட்டு வெளியிட்டுள்ள தீர்மானத்தில் இலங்கயில் நடந்தது இனப்படுகொலை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார். அதில் அவர், “நாங்கள் 14 வருடங்களிற்கு பின்னர் துன்பகரமான விதத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளை நினைகூறுகின்றோம் என்றும் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப்படுகொலையில் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் இழக்கப்பட்டன, பலர் காணாமல்போனார்கள் காயமடைந்தார்கள் இடம்பெயர்ந்தார்கள். கொல்லப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் மற்றும் அர்த்தமற்ற வன்முறையால் ஏற்பட்ட துயரத்துடன் தொடர்ந்தும் வாழும் அவர்களின் குடும்பத்தவர்கள் குறித்து எமக்கு அக்கறைகள் உள்ளன” என கனோடிய பிரதமர் நீதியின் முகத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், “கனடாவின் பல சமூகங்களில் நான் சந்தித்த பலர் தமிழ் கனடா பிரஜைகளின் கதைகள் மனித உரிமைகள் சமாதானம் ஜனநாயகம் போன்றவற்றை இலகுவாக கருதமுடியாது என்பதை நினைவுபடுத்தி நிற்கின்றன. இதன்காரணமாகவே கடந்த வருடம் மே18ம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவுதினமாக நாங்கள் அங்கீகரித்தோம் என தெரிவித்துள்ள கனடா பிரதமர் மோதலால் கொல்லப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் உரிமைக்காகவும் இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளவர்களிறகாக குரல்கொடுப்பதை கனடா நிறுத்தாது”என்றும் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்டுள்ள தீர்மானம், ஈழத் தமிழர் வரலாற்றில் மாத்திரமல்ல, உலக வரலாற்றிலும் முக்கியமானதாகும்.

### ஸ்ரீலங்கா அரசு அதிர்ச்சி

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்களின் இனப்படுகொலை குறித்த தீர்மானத்தை கண்டு ஸ்ரீலங்கா அரசு பெரும் அதிர்ச்சி அடைந்து உளறி வருகின்றது. உலகில் தலை சிறந்த நாடு ஒன்று, ஜனநாயகம் மற்றும் நீதியில் முக்கிய அடையளமாக திகழும் நாடு ஒன்று இனப்படுகொலையை ஏற்றுக் கொண்டமை ஸ்ரீலங்கா அரசுக்கு பெரும் அதிரச்சியை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைக்கான கனேடியத் தூதரை அழைத்து ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் தனது ஆட்சேபனையையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளார். அத்துடன் கனடா ஸ்ரீலங்கா அரசின் நல்லிணக்கத்தை குழப்புவதாகவும் சிறந்த நகைச்சுவையை சொல்லியுள்ளது ஸ்ரீலங்கா.

கனடா எடுத்துள்ள தீர்மானத்தை உலக நாடுகள் அனைத்தும் பின்பற்ற வேண்டும். உலகின் முன்னணி நாடுகளின் ஒன்றான கனடாவின் இந்த நிலைப்பாடு ஏனைய முன்னணி நாடுகளுக்கும் பல பாடங்களை சொல்லும் முன்மாதிரி ஆகும். ஈழத்தில் நடந்தது போன்ற இனப்படுகொலை உலகின் எந்த மூலையிலும் நடக்கக்கூடாது என்றால், கனடாவை உலக நாடுகள் பின்பற்ற வேண்டும். அத்துடன் இலங்கையில் நிரந்தர அமைதி ஏற்படவும் விடியல் ஏற்படவும் உலக நாடுகள் இந்த நிலைப்பாட்டிற்கு வருதல் காலத் தேவை என்பதை வலியுறுத்தி நிற்கிறது தமிழ் தேசிய ஆய்வு அமையம்.

# தோட்ட நிர்வாகத்தின் அராஜகமும் ஹைபொரஸ்ட் மக்களின் போராட்டமும்

சண்முகநாதன் பார்தீபன்




மலையக பெருந்தோட்ட மக்களின் 200 வருட வரலாற்றில், தொழில் உரிமை சார்ந்து அந்த மக்கள் முன்னெடுத்த பெரும்பாலான போராட்டங்கள் தோல்வியிலேயே நிறைவடைந்துள்ளன. ஒரு சில போராட்டங்களுக்கு வெற்றி கிடைத்துள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை. அந்த மக்களின் போராட்டங்களின் தோல்வியின் பின்னணியில் காட்டிக்கொடுப்புகளும், சதிகளும் செயற்பட்டுள்ளன என்பதை மறுக்க முடியாது. அவ்வாறான மற்றுமொரு உரிமைப் போராட்டம் நுவரெலியா மாவட்டம், வலப்பனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஹைபொரஸ்ட் தோட்டத்தில் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

### பிரச்சினைக்காக காரணமான "அவுட்குரோவர்"

ஒரு குறிப்பிட்ட தேயிலை மரங்களை ஒதுக்கீடு செய்து தொழிலாளர்களை வேலை செய்யக்கோரும், "அவுட்குரோவர்" முறைமையை மத்துரட்ட பெருந்தோட்ட நிறுவனம் சில வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தியிருந்தது. இந்த முறைமையின் ஊடாக நிர்வாகத்திற்கு பாரிய இலாபம் காணப்படுகிறது. குறிப்பாக இந்த முறைமையின் ஊடாக தொழிலாளர்களுக்கு மாதா மாதம் ஊதியம் வழங்க வேண்டிய அவசியமில்லை. பறிக்கும் கொழுந்திற்கு மாத்திரமே பணம். தேயிலை செடியை பராமரிக்கும் பொறுப்பு தாமாகவே தோட்ட நிர்வாகத்தின் கையில் இருந்து இருந்து தொழிலாளர்களின் கைகளுக்கு சென்றுவிடும். ஈபிஎப், ஈடிஎப் போன்றவற்றை தொழிலாளர்களுக்காக தோட்ட நிறுவனங்கள் செலுத்தத் தேவையில்லை. கொழுந்தினை தேயிலை மலைகளில் இருந்து கொண்டு வருவதற்கான போக்குவரத்து செலவு மிச்சம், தொழிலாளர்களே அதனை சுமந்துச் செல்வார்கள் இப்படி பல நன்மைகள் தோட்ட நிர்வாகத்திற்கும், தோட்ட நிறுவனங்களுக்கும் கிடைத்துவிடும்.

### ஹைபொரஸ்ட் தோட்டத்தின் பிரச்சினை

அவுட்குரோவர் முறைமையில் ஹைபொரஸ்ட் இல. 02 தோட்டத்தில் பணியாற்றும் மற்றும் தோட்டத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற பலருக்கும் தேயிலை மரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஆரம்பத்தில் ஒரு கிலோ தேயிலை கொழுந்திற்கு 40-50 ரூபாய் வரையில் வழங்கப்பட்டது. அதன் பின்னர் அந்த தொகையில் சிறிய அதிகரிப்பு ஏற்பட்டது. 60 ரூபாய் வரையிலும் வழங்கப்பட்டு வந்தது. இதற்கு



சமாந்திரமாக தோட்டத்தில் தொடர்ச்சியாக பணியாற்றிய ஏனைய தொழிலாளர்களுக்கும் தொழில் வழங்கப்பட்டு வந்துள்ளது. (நாளாந்த சம்பள அடிப்படையில்)

இந்த நிலையில் இந்த வருடம் ஏப்ரல் மாதம் ஒரு கிலோ தேயிலை கொழுந்திற்கு 75 ரூபாய் தருவதாக தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அறிவித்துள்ளது. கொடுத்த வாக்குறுதிக்கு அமைய ஏப்ரல் மாதம் ஒரு கிலோ தேயிலை கொழுந்திற்கு 75 ரூபாய் வீதம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் மே மாதம் தோட்ட நிர்வாகம் தனது கைவரிசையை காட்டியுள்ளது. பிரித்துகொடுக்கப்பட்ட தேயிலை மரங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உரம், கிருமி நாசினி உள்ளிட்டவற்றை தொழிலாளர்களுக்கு கடந்த காலங்களில் தோட்ட நிர்வாகம் வழங்கியுள்ளது. (இதிலும் மோசடி இடம்பெற்றுள்ளது) இவற்றை தோட்ட நிர்வாகம் இலவசமாகவே வழங்குவதாக தொழிலாளர்கள் கருதியுள்ளனர் (காரணம் தேயிலை செடிகள் இவர்களுக்கு சொந்தமானவை அல்ல தற்காலிக பராமரிப்பாளர்களே இவர்கள்) எனினும் மே மாதத்திற்கான கொடுப்பனவு கடந்த ஜூன் மாதம் 9ஆம் திகதி வழங்கப்பட்ட நிலையில் தொழிலாளர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்துள்ளது.

மாடாய் உழைத்து, வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து தேயிலை செடிகளை பராமரித்து, 200, 300 கிலோ என கொழுந்தை பறித்திருந்த தமக்கு 75 ரூபாய் என்ற அடிப்படையில் மிகப்பெரிய தொகை கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த நிலையில், ஆயிரம், இரண்டாயிரம் என சொற்ப தொகையே கிடைத்த நிலையில் தோட்ட நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டிருந்தது.

"கடந்த ஏப்ரல்-மே மாதங்களில் மொத்தமாக 324 கிலோ கொழுந்தை பறித்த எனக்கு 24,600 ரூபாய் தோட்ட நிர்வாகம் தந்திருக்க வேண்டும். எனினும் எனக்கு 2,840 ரூபாய் மாத்திரமே கிடைத்தது" என்கிறார் அவுட்குரோவர் முறைமையில் கொழுந்தை பறித்து கையளித்திருந்த தொழிலாளியும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தோட்டத் தலைவருமான சந்தனம் விஜயகுமார். "ஆர்.எட்வட் 293 கிலோ, அவருக்கு வெறும் 20 ரூபாய்தான் சம்பளம். செல்வமணி என்ற 139 கிலோ கொழுந்து ஆனால் அவருக்கு 80 ரூபாய் சம்பளம். கேட்டால் உரம், மருந்து வழங்கினோமே அதற்கு கழித்துவிட்டோம் என்கிறது நிர்வாகம்." என்கிறார் விஜயகுமார்.

ஒன்றிரண்டு தொழிலாளர்களுக்கு அல்ல பல தொழிலாளர்களுக்கு இவ்வாறுதான் கழிவு என்ற பெயரில் தோட்ட நிர்வாகம் உழைப்பிற்கான ஊதியத்தை வழங்க மறுத்துள்ளது. எனினும் அதே தோட்டத்தில் நிர்வாகத்துடன் நெருக்கமாக இருக்கும் சிலருக்கு அவர்கள் பறிந்த கொழுந்திற்கான முழுத் தொகை கிடைத்துள்ளது.

### தொழிற்சங்க நடவடிக்கையும், வடிவேல் சுரேஸும்

இவ்வாறான ஒரு சூழலில் பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த 10ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்டத் தரப்பு மாத்திரமன்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் தாம் பறித்த கொழுந்திற்கான முழுப் பணத்தைப் பெற்றுக்கொண்டவர்களும் இந்த மக்களுடன் இணைந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட மக்களை கடந்த 15ஆம் திகதி சந்திப்பதற்காக பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளருமான வடிவேல் சுரேஷ் அங்கு நேரடியாக சென்றிருந்தார். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த மக்களை சந்தித்த அவர், பிரச்சினைகளை கேட்டறிந்ததோடு, கடந்த 19ஆம் திகதி தொழில் திணைக்களத்தின் நுவரெலியா அலுவலகத்திற்கு அந்த மக்கள் சார்பில் ஒரு குழுவை அழைத்து தொழில் திணைக்கள பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டார். இதன்போது சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டதாக இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்றிருந்த அருட்சகோதரரும், சிவில் சமூக செயற்பாட்டாளருமான கருப்பையா நிக்சன்.

"பேச்சுவார்த்தையின்போது தோட்ட நிர்வாகத்தின் பல விடயங்கள் குறித்து நாம் எம்.பியிடம் எடுத்துரைத்தோம். குறிப்பாக பிரதான பிரச்சினையான பறித்த கொழுந்திற்கான உரிய கொடுப்பனவை வழங்காமைக்கு தீர்வினை பெற்றுத்தருவதான எம்.பி வடிவேல் சுரேஷ் உறுதிளித்தார். நிலுவையில் உள்ள கொடுப்பனவை விரைவில் வழங்குவதாக தோட்ட நிர்வாகமும் இணக்கம் தெரிவித்தது." என்கிறார் நிக்சன்.

"கொழுந்தை பறித்துக் கொண்டுவரும் பைக்கு கழிக்கப்படும் 3 கிலோவை ஒரு கிலோவாக குறைத்தல், தோட்டத்தில் தொழிலாளர்களை மரியாதையாக நடத்தத் தவறிய அதிகாரியை இடம்மாற்றுதல், 20 கிலோ கொழுந்தை பறித்தால் மாத்திரமே முழுநாள் சம்பளம் வழங்கப்படும் என்ற தோட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டை நீக்குதல் போன்ற பல பிரச்சினைகளுக்கு சாதகமான பதில் கிடைத்தது." என்கிறார் அருட்சகோதரர் நிக்சன்.

### இந்த சிக்கல்களுக்கு யார் காரணம்?

உண்மையில் தோடத்தில் உள்ள சில தொழிற்சங்கத் தலைவர்களும், தோட்ட நிர்வாகத்துடன் நெருக்கமாக இருக்கும் சிலருமே இந்த பிரச்சினைகளுக்கு காரணம் என ஹைபொரஸ்ட் இல.02 தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். அவர்கள் தமது சுயநலத்திற்காக ஏனைய தொழிலாளர்களை காட்டிக்கொடுப்பதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். அவர்களின் சுயநலத்திற்கு தாம் இரையாவதை அறியாமலே அவர்கள் விரிக்கும் வலையில் பலர் சிக்கிக்கொள்வதாகவும் வேறுசிலர் தெரிவிக்கின்றனர். தோட்ட நிர்வாகத்தின் அடாவடித்தனங்களுக்கு எதிராக செயற்பட வேண்டிய தோட்டத் தலைவர்கள், அவர்கள் தரும் பணம் உள்ளிட்ட சலுகைகளுக்காகவும் அதனை கண்டும் காணாததுபோல் செயற்படுவதாக அந்த மக்கள் கவலை வெளியிடுகின்றனர். (இவர்கள் தமது பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லை) தோட்ட நிர்வாகத்தின் ஆதரவுடன் தோட்டத்தில் தோட்ட அதிகாரிகளுக்கு என அமைக்கப்பட்ட வீடுகள் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்ட சம்பவங்களும் கடந்த காலங்களில் அந்த தோட்டத்தில் இடம்பெற்றுள்ளன. அது மாத்திரமன்றி வீடமைப்புத் திட்டத்திற்கென காணிகளை பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளின்போதுகூட தோட்டத்தின் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கு கூடிய பரப்பளவில் காணிகள் வழங்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

### என்னதான் தீர்வு

"ஒற்றுமையே பலம்" தோட்டத்தில் தொழிலாளர்களாக இருக்கும் அனைவரும் ஒற்றுமையாக இருந்து தோட்ட நிர்வாகத்தின் அராஜகங்களுக்கு எதிராக குரல் கொடுக்குத் போதுதான் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொள் முடியும். கடந்த காலங்களிலும் பலப் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த ஒற்றுமையே காரணமாக அமைந்துள்ளது. உள்ளூரில் மாத்திரமல்ல சர்வதேச ரீதியாகவும் ஒற்றுமையே பல வெற்றிகளுக்கு காரணமாக அமைந்துள்ளது என்கிறார் அந்த தோட்டத்தைச் சேர்ந்த செயற்பாட்டாளரும், விவசாயியுமான சாமுவேல் ரூபன். தான் தோட்டத்தில் பணியாற்றாவிட்டாலும் இந்த தோட்டத்தில் வாழும் மக்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மையே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம் என்கிறார் அவர்.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com



# 2009 இல் இலங்கையில் அரங்கேற்றப்பட்டது தமிழ் இனப்படுகொலை என்பதை பிரித்தானியா அங்கீகரிக்க வேண்டும்




**சுகிர்தன்**

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை என்பதை பிரித்தானியா அங்கீகரிப்பதுடன் பொதுசன வாக்கெடுப்பின் மூலம் இலங்கையில் அரசியல் தீர்வை நிறுவ பிரித்தானியா தலையிட வேண்டுமென பிரித்தானியாவிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கு 2009 இல் நிகழ்த்தப் பட்டது இனப்படுகொலை என்பதை இங்கிலாந்து முறையாக அங்கீகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை தடுத்து நிறுத்தக் கோரியும் பிரித்தானியாவில் இம்மாதம் (14 June) சிறப்பு மாநாடு ஒன்று இடம்பெற்றது.

தமிழர் தாயகத்தில் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு எனும் கருப்பொருளில் பிரித்தானியாவின் மனித உரிமைகள் தொடர்பிலான வழக்கறிஞர் பற்றிக் லூயிஸ் தலைமையில் பிரித்தானிய பாராளுமன்றின் சிறப்பு மண்டபத்தில் இடம்பெற்ற இம் மாநாட்டில் தாயகத்து அரசியல் செயற்பாட்டாளர்கள், பிரித்தானிய அனைத்து கட்சி அரசியல் தலைவர்கள் மற்றும் பிரித்தானிய தமிழ் செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதில் தாயகத்திலிருந்து வருகைதந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள் மற்றும் சட்டத்தரணி மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான வி.எஸ்.எஸ்.தனஞ்சயன் ஆகியோர் சிறிலங்காவில் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இனவழிப்பு தொடர்பிலும் அவற்றிற்கு சர்வதேச தீர்வை எவ்வாறு அணுகுவது தொடர்பிலும் சிறப்புரைகள் ஆற்றினர்.

பிரித்தானியா தமிழ் இளையோர் சார்பாக செல்வி. கிசானியின் வரவேற்புரை மற்றும் செல்வன்.சர்வீனின் இனவழிப்பு சிறப்பு உரைகளை முதலில் வழங்கினர். அதனைத் தொடர்ந்து மாநாட்டுக்கு வருகை தந்திருந்த பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஆகிய Mr John MacDonald MP, Mr Virendra Sharma MP, Lib Democratic Leader Sir Ed Davey MP, Ms Sarah Jones - MP and Shadow Minister of State for Police and the Fire Service, Mr Sam Tarry MP, Mr Gareth Thomas MP - Shadow Minister for International Trade ஆகியோர் தமது கருத்துரைகளை வழங்கிய சம வேளை இனவழிப்புக்கான தீர்மானத்தினை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான முனைப்புகளில் ஈடுபடுவதாகவும் வாக்குறுதி அளித்திருந்தனர்.

இந்நிலையில் இம்மாநாட்டிற்காக தாயகத்திலிருந்து வரகை தந்து சிறப்புரையாற்றிய சட்டத்தரணி மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான வி.எஸ்.எஸ். தனஞ்சயன் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் தொடரும் இராணுவ மயமாக்கல் பௌத்த மயமாக்கல் மற்றும் காணிகள் அபகரிப்பு தொடர்பில் உரையாற்றினார்.

இதில் போர் நிறைவுக்கு வந்து 14 ஆண்டுகள் ஆன போதிலும் வடக்கு கிழக்கில் இராணுவத்தினரின் நிலை உயர் மட்டத்திலேயே காணப்படுவதாக கூறினார். குறிப்பாக இரு பொது மகனுக்கு ஒரு இராணுவ வீரர் என்ற நிலையில் வடக்கு கிழக்கில் இராணுவவமயமாக்கல் அதிகரித்த நிலையிலேயே இருப்பதாக விசனம் தெரிவித்தார். அதேவேளை இராணுவத்தினர் தனியார் காணிகளை அபகரிப்பது மட்டுமல்லாது அவர்களே விவசாயங்களை அக்காணிகளில் செய்வதாகவும் தெரிவித்தார். இதனால் வடக்கு கிழக்கில் மக்கள் பாரிய நெருக்குதலுக்கு உள்ளாவதாக கூறினார்.

அதேவேளை குறுந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான வழக்கினை முன்னெடுப்பவர் என்ற வகையில் அங்கு மேலதிகமாக எந்தவித கட்டுமாண பணிகளையும் செய்யக்கூடாது என முல்லைத்தீவு நீதிமன்றினால் 3 தடவைகள் ஆணை பிறப்பிக்கப்பட்ட போதிலும் அதனையும் மீறி இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புடன் அங்கு பௌத்த விகாரை கட்டுமான பணிகள் இடம்பெற்று நிறைவுறும் நிலையை எட்டியுள்ளதாக கூறினார்.

அத்துடன் வடழக்கு கிழக்கில் இயங்கும் அரச நிறுவனங்களும் ஒரு தலைப்பட்சமாக இயங்குவதாகவும் குற்றம் சாட்டினார். குறிப்பாக தொல்பொருள் ஆராச்சி அதிகார சபை தன்னிச்சையாக அரசுக்கு சார்பாகவே வடக்கு கிழக்கில் இயங்குவதாகவும் அவர்களே காணிகளை அபகரிக்கு முன்னிற்பதாகவும் கூறினார்.

இதனைத்தொடர்ந்து தாயாகத்திலிருந்து இம் மாநாட்டிற்காக வருகை தந்திருந்த தவத்திரு வேலன் சுவாமிகள் தனது சிறப்புரையில் பௌத்த மயமாக்கல் என்னும் பெயரில் வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் திட்டமிட்ட இனவழிப்பு நடைபெறுகிறது. அதேவேளை இவற்றிற்கு எதிராக குரல் கொடுக்கும் மனித உரிமை செயற்டபாட்டாளர்கள் சிவில் சமூகத்தினர் நேரடியாகவே கைதுகளுக்கும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என கூறினார்.

தமிழர் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது மத குருக்களோ எவராக இருந்தாலும் நீதிமன்றின் எந்தவொரு பிடியாணையும் பெறாது கைதுசெய்யப்படும் நிலமையே வடக்கு கிழக்கில் நிலவுவதாக அவர் இம் மாநாட்டில் பிரித்தானிய எம். பி.க்களிடம் தெரிவித்தார்.

இறுதியாக பௌத்த மயமாக்கல் எனும் பெயரில் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனப்படுகொலையை பிரித்தானியா தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் கனடாவை பின்பற்றி பிரித்தானியாவும் தமிழர்களுக்கு எதிராக தாயகத்தில் இலங்கை அரசால் நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலையே என்பதை அங்கீகரிக்க வேண்டும் எனவும் அவர் இம் மாநாட்டின் ஊடாக பிரித்தானிய அனைத்து கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை முன்வைத்தார்.

அதேவேளை ஆச:ீயவசஉைம டுநறளை (Human Rights Barrister) மற்றும் ஜனனி ஜனநாயகம் (மனித உரிமைச் செயற்பாட்டாளர், பணிப்பாளர் Chair Together Against Genocide) ஆகியோரும் உரையாற்றினர்.

மேற்படி மாநாட்டினைத் தொடர்ந்து தவத்திரு வேலன் சுவாமிகள் நமது ஈழநாட்டிற்கு வழங்கிய சிறப்பு செவ்வியில் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலமே தமிழர்களுக்கான நிரந்தர தீர்வினை அடையமுடியும். எனவே பிரித்தானியா இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

அதேநேரம் ஈழத் தமிழர்களுக்கு 2009 மே யில் இடம்பெற்றது இனப்படுகொலை என்பதையும் பிரித்தானியா அங்கீகரிக்க வேண்டும் என கோரியுள்ளதாகவும் கூறினார்.

# ரணிலுடைய லிபரல் முகம் ஆடும் நாடகம்



**தேசிகன்**

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசி யப் பட்டியல் ஆசனத்தின் மூலமாக நாடாளுமன்றத்திற்கு இரண்டு ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் பிரசன்ன மானர் ரணில் விக்கிரமசிங்க.

தனியொருவராக நாடாளுமன்றுக்கு வந்த அவர் தற்போது நிறைவேற்று அதிகாரங்களை உடைய ஜனாதி-பதியாக வலம் வந்துகொண்டிருக்கின்றார்.

தென்னிலங்கை பெரும்பான்மைத் தலைவர்களில் ரணில் லிபரல் முகத்தினை உடையவர் என்பது பொதுப் படையான விடயமாகும். அதற்காக அவர் இனவாதி அல்லவென்று கூறிவிட முடியாது.

ஒரே தடவையில் மரத்தினை சாய்ப்பதை விடவும், மெல்லமெல்ல கருவறுத்தி ஒட்டுமொத்தமாக அழிப்பது பாரதூரமானது. அவ்விதமாகச் செயற்படவல்ல ஒரு அரச-யில் நரித் தந்திரத்துக்குச் சொந்தக்காரர் தான் ரணில்.

தற்போது ரணில் தனது லிபரல் முகத்தினை மையப்படுத்தி ஆடுகின்ற நாடகத்தினால் சிக்கியுள்ள தரப்பினர் அதனை அறிந்துள்ளார்களா என்பது பெருங்கேள்வியாகவுள்ளது.

குறிப்பாக, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை உடைத்தல், பொதுஜனபெரமுனவை உடைத்தல், ஐக்கிய மக்கள் சக்தியை உடைத்தல் என்பன அவருடைய சொந்த அரசி யல் நலன்களை சார்ந்தது.

அவ்வாறு ஒவ்வொரு கட்சிகளிலும் உடைத்தெடுக்கும் நபர்களை மையப்படுத்தி அடுத்த தடவை ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் தனது கைக ளைப் பலப்படுத்திக்கொள்வதற்கே ரணில் முனைகின்றார்.

அதுமட்டுமன்றி, நாட்டின் பழம்பெரும் முதல்கட்சி யான ஐக்கிய தேசியக் கட்சி தன்னால் முழுமையாக அழிந்து போய்விட்டது என்ற பழிச்சொல்லுக்கு இலக்காகி விடாது, மீண்டும் அக்கட்சியை சீர்தூக்கி தனது மரு மகனான ருவான் விஜயவர்த்தனவிடத்தில் ஒப்படைத்துச் செல்ல வேண்டும் என்பது தான் அவருடைய இறுதியான இலக்காக இருக்கின்றது.

இதற்காக அவருடைய நகர்வுகள் தீவிரமாக இருக்கின்றன. அவற்றில் சில முக்கிய விடயங்களை இந்த இடத்தில் கவனத்தில் கொள்வது மிகமிகப் பொருத்தமானதென்று கருதுகின்றேன்.

அதில் முதலாவது, தேசிய இனப்பிரச்சினை விடயத் தினை கைவிட்டு, பொருளாதார அபிவிருத்திதான் நாட்டிற்கு தற்போது தேவையான விடயம். அதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்ற சிந்தனையை வலிந்து திணித்து வருகின்றார்.

இதன்மூலம் நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூலவேராக இருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் முழுமையான கரிசனை அற்றவராக இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தகது.

அடுத்தவிடயம், தமிழ்த் தரப்புடனான பேச்சுவார்த் தையை முன்னெடுக்கின்றார். இது அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தான் வேட்பாளராக களமிறங்கும்போது, சஜித் உள்ளிட்டவர்களுக்கு ஒருசதவீத வாக்குகளும் மலையகத்திலும், வடக்கு, கிழக்கிலும் செல்லாத வகை-கயில் நகர்வுகளைச் செய்து வருகின்றார்.

அதற்காகவே தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை முன்னெடுக்கின்றார். ஆரம்பத்தில் இந்தப் பேச்சுக்கள் மக்களின் உடனடியான வாழ்வாதாரப் பிரச்சினைகளை மையப்படுத்தியதாக இருந்தாலும், பின்னரான காலத்தில் அந்த நிலைமைகள் கூட மாறிவிட்டன.

கடந்த சுதந்திர தினத்திற்கு முன்னதாக இனப்பிரச் சினைக்கான தீர்வினை வழங்குவதாக அறிவித்திருந்த போதும், திடீரென நாடாளுமன்ற வளாகத்திற்கு முன்பாக பிக்குகள் அணியொன்று கொழும்பில் ஒன்றுகூடி 13ஆவது திருத்தச்சட்டத்தினை அமுலாக்குவதற்கு எதிர்ப்பு வெளியிட்டது.

அந்த எதிர்ப்புடன் ஜனாதிபதி ரணில் பெட்டிப்பாம்பாக அடங்கிப்போய்விட்டார். அதன் பின்னர் இந்தமாதத்தின் எட்டாம் திகதி, இலங்கை தமிழரசுக்கட்சியுடன் நடத்திய சந்திப்பின்போது, தொல்பொருளியல் திணைக்களம் கையகப்படுத்தி வந்த பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுக்குமாறு அதன் பணிப்பாளர் பேரா சிரியா அநுர மனதுங்க அப்பதவியில் இருந்து விலகினார்.

அதுமட்டுமன்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோக பூர்வ அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு தொடர்பில் பதிவு செய்யப்பட்ட காணொளியும் திட்டமிடப்பட்டே வெளியிடப்பட்டது.

உதாரணமாக, குறித்த காணொளி வெளியிடப்படுவதன் ஊடாக தனது தமிழ், முஸ்லிம் வாக்குகளையும் அவர்கள் மீதான செல்வாக்கையும் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்று தான் கணக்குப்போட்டார்.

ஆனால், அவரது திட்டம் முழுமையாக எதிர்வினையே ஆற்றியுள்ளது. அதாவது பணிப்பாளர் பேராசிரியர் அனுர மனுதுங்களின் இராஜினாமா தென்னிலங்கையில் சற்றே உறக்கத்தில் இருந்த பௌத்த தேரர்களை தட்டியெழுப்பி விட்டிருக்கின்றது.

தேரர்கள் போர்க்கொடி தூக்கியதும், மீண்டும் அமைதியாக, தான் காணிகளை வழங்கப்போவதில்லை என்று ஊடகங்களிடத்தில் தெரிவித்து விட்டு அமைதியாக வெளிநாட்டுப்பயணத்துக்குச் சென்றுவிட்டார்.

ஆக, தென்னிலங்கையில், சிங்கள, பௌத்த தேரர்கள் போர்க்கொடி தூக்கினால் ஒன்று இரண்டு அடிகளை பின்னகர்த்தும் ஏனைய வாக்குவங்கியை மையப்படுத்திய அரசியல்வாதிகள் போன்றே ரணிலும் செயற்படுகின்றார் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

இத்தகைய ரணில் விக்கிரமசிங்க லிபரல் முகத்தினைக் கொண்டிருந்தாலும், செயற்பாட்டில் இனவாத சிந்தனை யுடன், ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் குடிப்பரம்பலை மாற்றியமைக்கு இனவழிப்புச் செயற்பாட்டை முன்னெடுப்பதில் பின்னிற்காது திரைமறை-றவில் நகர்த்தியே வரும் சதாரண அரசியல்வாதியாகவே இருக்கின்றார்.

இவ்வாறு செயற்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை, தொடர்ந்தும் தமிழ் தரப்புக்கள் நம்பிக் கொண்டு பேச்சுவார்த்தை மேசையில் அமர்வது எவ்வளவு பொருத்தமானது என்ற கேள்வியை இங்கு ஏற்படுத்து கின்றது.

குறிப்பாக, தமிழரசுக்கட்சி இறுதியாகச் சென்றது போன்று வலிந்து சென்று சந்திப்புக்களை நடத்துவதால் எவ்விதமான பயனும் ஏற்படப்போவதில்லை.

ஆகவே, தமிழ்த் தரப்புக்கள் ரணிலின் லிபரல் முகத்தை மையப்படுத்தி முன்னெடுக்கப்படும் நாடகத்திற்குள் சிக்காது, ரணிலின் லிபரல் முகத்தை மையப்படுத்தி செயற்பாட்டு வடிவமளிக்கக் கூடிய மூலோபாயமொன்றை வகுப்பதே பொருத்தமானதாக இருக்கும்.

இதுவொருபுறமிருக்கையில், ரணிலின் லிபரல் முகத்தி னால் அயல்நாடான இந்தியாவும் சிக்கலில் தான் உள்ளது. ரணில் ஜனாதிபதி பதவியை பெற்றுக்கொண்டு 11 மாதங்களாகின்றன. இந்தக் காலப்பகுதியில் அவர் இந்தியாவுக்குச் செல்லவில்லை.

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகார பீடத்தில் அமருகின்ற எந்தவொரு தலைவர்களும் சொற்ப நாட்களில் இந்தியாவுக்குச் செல்வதே மரபாக இருந்து வருகின்றது.

ஆனால், ரணில் பதவியை ஏற்றுக்கொண்டதும் இந்தியாவுக்கான தனது முதல் விஜயத்தினை இற்றை வரையில் மேற்கொள்ளவில்லை.

ஆனால் அதற்கு முன்னதாக, ஜப்பான், பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளுக்கு விஜயம் செய்து விட்டு தற்போது இரண்டாவது சுற்றையும் பிரான்ஸ், பிரித்தானியா என்று தொடங்கிவிட்டார்.

எனினும், இந்த இரண்டாவது சுற்றில் இந்தியாவுக்கு எதிர்வரும் 21ஆம் திகதிசெல்லப்போகின்றார். இந்தப் பயணத்தின்போது, இந்தியா வழமையைப் போன்றே 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடை முறைப்படுத்துமாறு கோரும்.

அச்சமயத்தில், தற்போது தேர்தலை நடத்தும் சூழல் இல்லை. ஆகவே ஆளுநர் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்களை மையப்படுத்திய 'ஆலோசனை சபை' ஒன்றை ஸ்தாபிப்பதற்கு தயாராக உள்ளேன் என்ற வாக்குறுதியை வழங்கப் போகின்றேன் என்றே பதிலளிக்கவுள்ளார்.

இந்தமாகாணஆலோசனைமுறைமையைமுன்மொழிந்த வர்கள், சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் கலாநிதி. விக்னேஸ்வரன் ஆகிய இருவரும் தான். ஆகவே அங்கும் தமிழர்கள் தான் இந்த விடயதினை விரும்புகின்றார்கள். அதனை வழங்குவதற்கு தயாராகவே உள்ளேன் என்று கூறப்போகின்றார்.

அது மறைமுகமாக, தமிழர்கள் இந்தியாவின் முன் மொழிவை புறக்கணிப்பாகதாகவே கருத்தில் கொள்ளப்படும் அபாயங்களும் இருக்கின்றன.

அதேநேரம், இந்திய விஜயத்தினை நிறைவு செய்து கொண்டு அடுத்து சீனா செல்கின்றார். ஆகவே இந்தியா அளவுக்கு அதிகமாக அழுத்தங்களை ரணிலுக்கு பிரயோகிக்க வாய்ப்புக்கள் மிகக் குறைவு தான்.

ஏனென்றால் இந்தியா அழுத்தங்களை அதிகமாக பிரயோகித்தால் அது நிச்சயமாக, சீனாவுடனான உறவு-கள் மேலும் புத்துயிர் அடைவதற்கு வாய்ப்புக்களை உருவாக்கும் என்ற இயல்பான அச்சம் இந்தியாவுக்கு ஏற்படுவதில் நியாயங்கள் உள்ளன.

ஆகவே, உள்நாட்டில் தமிழர்களை மையப்படுத்தி எவ்வாறு காலங்கடத்தும் நகர்வுகளை மேற்கொள்கின்றாரோ அதுபோன்று தான் இந்தியா பாரிய உதவிகளைச் செய்தாலும் அதனுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தினை இயலுமான வரையில் மலினப்படுத்தவே முனைகின்றார் என்பது வெளிப்படையானது.

ஆகவே, இந்தியா, தமிழ் மக்கள் என்று அனைவரும் லிபரல் முக நாடகத்திற்குள் சிக்கிவிட்ட நிலைமை தான் தற்போதுள்ளது.

இந்த சிக்கலில் இருந்து இந்தியாவும், தமிழர்களும் எவ்வாறு வெளியே வரப்போகின்றார்கள் என்பதற்கு இதுவரையில் எந்தவிதமான உபாயங்களுமில்லை.

அதிலும் குறிப்பாக, தமிழ்த் தரப்பித்தரப்பிடத்தில் ரணிலுக்கு 'செக்' வைக்குமளவிற்கு சிம்மன சொப்ப சக்தி உருவாகவில்லை என்பது தான் கவலைக்குரிய விடயமா-கும்.

# சிங்கப்பூருக்கு யாழ்ப்பாண தமிழனின் தலைமைத்துவம்

66 வயதான தர்மன் சண்முகரத்தினம், இலங்கையின் யாழ்ப்பாணத்தைப் பூர்வீமாகக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரின் தந்தை சிங்கப்பூரில் பிறந்த அந்நாட்டின் புகழ்பெற்ற மருத்துவத்துறை பேராசிரியர் கனகரட்ணம் சண்முகரத்தினம் ஆவார். சட்டத்தரணியான ஜேன் யுமிக்கோ இட்டோகியை திருமணம் செய்த தர்மன் சண்முகரத்தினத்துக்கு 4 பிள்ளைகள் உள்ளனர்.



**பூலோகன்**

திறமையான நிர்வாகம் மற்றும் வலுவான பொருளாதார வல்லமைக்கு பெயர் பெற்ற சிங்கப்பூர், அதன் ஜனாதிபதி தேர்தலிலும் கவனத்தை ஈர்த்துள்ளது. சிங்கப்பூர் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் செயல்முறை, ஜனநாயகத்திற்கான நாட்டின் அர்ப்பணிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை மற்றும் உள்ளடக்கிய கொள்கைகளை பிரதிபலிக்கிறது.

அந்தவகையில், இலங்கைக்கு விஜயம் செய்த சிங்கப்பூரின் சிற்பி லீகுவான் யூ, இலங்கையைப் போன்று சிங்கப்பூரை மாற்றியமைக்க வேண்டும் என்று கூறியதாக கதைகள் உள்ளன. ஆனால், தற்போது சிங்கப்பூரைப்போன்று இலங்கையை மாற்றியமைக்க எத்தனை ஆண்டுகளாகுமோ என்ற சிந்தனை தான் தோன்றியிருக்கின்றது.

ஆனால், லீகுவான் யூவின் மூத்த புதல்வாரன பிரதமர் லீ சியென் லூங் பிரதமராக இருக்கின்ற காலத்தில் இலங்கையின் யாழ்ப்பாணத்தினை பூர்வீகமாகக் கொண்ட ஒருவர் அந்நாட்டின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போகின்றார்.

சிங்கப்பூரின் ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக பிரபல பொருளாதார நிபுணரும் முன்னாள் துணைப் பிரதமரும், சிரேஷ்ட அமைச்சருமான தர்மன் சண்முகரத்தினம் களமிறங்கவுள்ளார்.

அதற்காக அவர் தற்போது, சிங்கப்பூரின் சிரேஷ்ட அமைச்சர் மற்றும் சமூக கொள்கைகள் அமைச்சரர் மற்றும் மத்திய வங்கித் தலைவர் உட்பட பல பதவிகளிலிருந்து விலகியுள்ளார்.

அத்துடன் அவர், பிரதமர் லீ சியென் லூங்க்கு தர்மன் சண்முகரத்தினம் எழுதியுள்ள கடிதத்தில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்பத்தை வெளியிட்டுள்ளதுடன், அரசியலிலிருந்து தான் ஓய்வு பெறுவதாகவும், அரசாங்கத்தில் தான் விகிக்கும் சகல பதவிகளிலிருந்தும் ஆளும் மக்கள் செயற்பாட்டுக் கட்சியின் (பிஏபி) அங்கத்துவத்திலிருந்தும் ஜூன் 7 ஆம் திகதியுடன் விலகுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிங்கப்பூர் நாணய அதிகார சபை என அழைக்கப்படும் சிங்கப்பூர் மத்திய வங்கியின் தலைவர், பதவி, சிங்கப்பூர் முதலீட்டுக் கூட்டுத்தாபனத்தின் தலைவர், சிங்கப்பூர் பொருளாதார அபிவிருத்திச் சபையின் சர்வதேச ஆலோசனைப் பேரவையின் தலைவர் உட்பட ஏனைய பதவிகளிலிருந்தும் தான் இராஜினாமா செய்வதாக தர்மன் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ள, தர்மன் சண்முகரத்தினத்துக்கு பிரதமர் லீ சியென் லூங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் மத்திய வங்கியிலும், அரசாங்கத்திலும் 27 வருடங்கள் இருவரும் இணைந்து பணியாற்றியவதை குறிப்பிட்டுள்ள பிரதமர் லீ சியென் லூங், 40 வருடங்களாக சிங்கப்பூருக்கு தர்மன் சண்முகரத்தினம் ஆற்றிய சேவைகளையும் பாராட்டியுள்ளார்.

சிங்கப்பூர் வளர்ச்சியில் அமைச்சரவைப் பதவிகளை வகித்தவர் நீங்கள். அடுத்த தலைமுறை அமைச்சர்களை உருவாக்க எனக்கு உதவினீர்கள் என்று பிரதமர் லீ சியென் லூங் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, ஜனாதிபதியாக தேர்வினதல் எப்போதும் போல் நீங்கள் கவனமாகவும், சுயாதீன மனதுடன் பணியாற்றுவீர்கள் எனவும், உங்கள் சர்வதேச தகுதியும் அரசாங்கத்தில் உங்கள் அனுபவமும் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உதவும் எனவும் பிரதமர் சியென் லூங் குறிப்பிட்டுள்ளார்.

### யார் இவர்?

66 வயதான தர்மன் சண்முகரத்தினம், இலங்கையின் யாழ்ப்பாணத்தைப் பூர்வீமாகக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரின் தந்தை சிங்கப்பூரில் பிறந்த அந்நாட்டின் புகழ்பெற்ற மருத்துவத்துறை பேராசிரியர் கனகரட்ணம் சண்முகரத்தினம் ஆவார். சட்டத்தரணியான ஜேன் யுமிக்கோ இட்டோகியை திருமணம் செய்த தர்மன் சண்முகரத்தினத்துக்கு 4 பிள்ளைகள் உள்ளனர்.

1957 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் பிறந்த தர்மன், லண்டன் பொருளியல் பாடசாலை எனும் பல்கலைக்கழகத்தில் பொருளியல்துறையில் பட்டம் பெற்றவர். பின்னர், பிரிட்டனின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொருளியல் முதுநிலைப்பட்டம் பட்டத்தையும் அமெரிக்காவின் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுதத்துவமாணி பட்டத்தையும் பெற்றார்.

சிங்கப்பூர் மத்திய வங்கியில் பிரதம பொருளியலாளராக பணியாற்றிய அவர், பின்னர், சிங்கப்பூர் சிவில் நிர்வாக சேவையில் இணைந்தார். கல்வி அமைச்சில் கொள்கைகளுக்கான சிரேஷ்ட பிரதிச் செயலாளராக அவர் பதவி வகித்தார். பின்னர் மத்திய வங்கியில் மீண்டும் இணைந்த அவர், அதன் முகாமைத்துவ பணிப்பாளரானார்.

2001 ஆம் ஆண்டு அப்பதவியிலிருந்து இராஜினாமா செய்து, தேர்தலில் போட்டியிட்டார். பிஏபி எனும் மக்கள் செயற்பாட்டு கட்சியின் சார்பில் முதல் தடவையாயக அவர் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

கல்வி அமைச்சர், நிதியமைச்சர் உட்பட பல பதவிகளை வகித்த அவர், 2011 முதல் 2019 ஆம் ஆண்டு முதல் பிரதிப் பிரதமராகவும் பதவி வகித்தார். அதன்பின் சிரேஷ்ட அமைச்சர் எனும், பிரதமர், பிரதிப்பிரதமருக்கு அடுத்த உயர் பதவியையும் சமூகக் கொள்கைகள் பதவியையும் வகித்து வந்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நாணய, நிதியியல் குழுவின் தலைவர் பதவி, மற்றும் ஜி-20 அமைப்பின் பூகோள நிதியில் நிர்வாகத்தின் நிபுணர் குழுவின் தலைவர் பதவிகளையும் வகித்த தர்மன், சிங்கப்பூரிலும் சர்வதேச ரீதியாகவும் ஏராளமான விருதுகளையும் வென்றவர்.

சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகுவதற்கு பல்வேறு தகுதிகளைக் கொண்டிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக குறித்த நபர் அரசியல் கட்சி சார்பாக இருக்க கூடாது என்பதோடு அதற்காக ஜனாதிபதித் தேர்தல்கள் குழுவின் தகுதிச் சான்றிதழையும் பெற வேண்டும்.

இத்தேர்தலில் இதுவரை வேறு எவரும் போட்டியிட முன்வராதுள்ள நிலையில் தர்மன் சண்முகரத்தினத்தின் வெற்றி ஏறக்குறைய உறுதியாகிவிட்டது என்றே அவதானிகள் தெரிவிக்கின்றது.

தமிழரான இவர் அப்பதவியை வகிப்பது முதற் தடவையல்ல. ஏற்கனவே சிங்கப்பூரின் 6 ஆவது ஜனாதிபதியாக தமிழரான எஸ்.ஆர்.நாதன் 1999 முதல் 2011 ஆம் ஆண்டு வரை பதவி வகித்திருந்தார்.

இப்பின்னணியில் சிங்கப்பூரின் பத்தாவது ஜனாதிபதியாக தர்மன் சண்முகரத்தினம் தெரிவாகலாம் என்று எதிர்பார்கின்றது.

### தேர்தல் முறைமை

சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தல், மதிப்பிற்குரிய பதவியை வகிக்கத் தேவையான தகுதிகள் மற்றும் பண்புகளை வேட்பாளர்கள் பெற்றிருப்பதை உறுதிசெய்ய வடிவமைக்கப்பட்ட தனித்துவமான கட்டமைப்பைப் பின்பற்றுகிறது.

ஜனாதிபதியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான தகுதி மற்றும் திறன்களை அவர்கள் பெற்றிருப்பதை உறுதி செய்வதற்காக, தகுதியான விண்ணப்பதாரர்கள் முக்கிய பொது அல்லது தனியார் துறைப் பாத்திரங்களில் அனுபவம் உட்பட குறிப்பிட்ட அளவுகோல்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

சிங்கப்பூர் ஜனாதிபதி முக்கியமான காவல் அதிகாரங்களைக் கொண்ட ஒரு சடங்கு ரீதியான பதவியையே வகிக்கிறார். தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி தினசரி நிர்வாகத்தில் ஈடுபடவில்லை என்றாலும், நாட்டின் நிதி இருப்பு, முக்கிய பொது நியமனங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் சரியான செயற்பாட்டை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

இந்த தனித்துவமான அதிகாரப்பிரிப்பு சிங்கப்பூரின் அரசியல் நிலப்பரப்பில் சமநிலைகளின் அமைப்பை உறுதி செய்கிறது.

சிங்கப்பூரில் ஜனாதிபதி வேட்பாளர்கள் திறன்கள், தலைமைத்துவ குணங்கள் மற்றும் சிங்கப்பூருக்கும் அதன் மக்களுக்கும் சேவை செய்வதற்கான அர்ப்பணிப்பை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

அங்கு தேர்தல் பிரசாரம் என்பது பேரணிகள், விவாதங்கள் மற்றும் ஆதரவைப் பெற ஊடக தொடர்புகள் மூலம் பொதுமக்களுடன் ஈடுபடுவதை உள்ளடக்குகிறது.

சிங்கப்பூர் வாக்காளர் பங்கேற்பிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. 21வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குடிமக்கள் வாக்களிக்க உரிமை உண்டு. அத்துடன் அங்கு வாக்காளர் கல்வி முயற்சிகளில் அரசாங்கம் முன்கூட்டியே ஈடுபட்டு, வாக்காளர்களை வளர்க்கிறது.

அந்த அடிப்படையில், சிங்கப்பூர் ஜனதிபதித் தேர்தல் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக்கான நாட்டின் அர்ப்பணிப்புக்கு சான்றாகும். அத்துடன் அது நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

அதேநேரத்தில் அதன் நாட்டின் முக்கியமான பெறுமதிகளாகக் கொள்ளப்படுகின்ற ஒருமைப்பாடு மற்றும் பொதுச் சேவைக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றைப் பாதுகாக்கிறது.






























நமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இம்முறை கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் வேண்டுகோளிற்கு இணங்க இம்முறை வெள்ளாங்குளம், கரியாலை நாகபடுவான், முக்கொம்பன் பிரதேசங்களை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மாவீரர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் இலண்டனிலிருந்து தாயகத்திற்கு நேரடியாக சென்ற முகமட் யமீல் மற்றும் பாத்திமா நிலூபா ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் இரண்டாம் கட்ட உதவியாக அவர்களினாலேயே நேரடியாக மாணவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுற்றோர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இந்த உதவித்திட்ட நிகழ்வில் சுமார் 52 மாணவர்கள் பாடசாலை கற்றல் உபகரணங்களை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.